Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷ:.பான் 30 (06.11.2002) புதன்கிழமை இதழ் : 37

IIS இன்
கணனிக் கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில்திட்டம்-2003
விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் IIS அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்
விண்ணப்ப முடிவுத் திகதி : 15.11.2002
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.
(சி-156)

# ஒஸ்லோ செல்வதற்கு முன்னர் வன்னியில் முக்கிய சந்திப்பு!

## விண்ணாணம் விநாசியர்



உவர் ஏன் 'றோ'ந்து வாராரெண்டு விளங்கேல்லை...?

## புனரமைப்பு உபகுழுவின் முதற்கூட்டம் வரும் 18இல்

(ரமணன்)

**தாய்லாந்து பேச்சுக்களுக்கமைய உருவாக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்ற விவகாரங்களை ஆராயும் உபகுழுவினது முதலாவது சந்திப்பு - வரும் 18 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. ஒஸ்லோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னர் - முக்கிய சில நகர்வுகளையும், முடிவுகளையும் நோக்கியதாக இச்சந்திப்பு அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

தாய்லாந்தில் நடைபெற்று முடிந்த பேச்சுக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மூன்று உபகுழுக்களில் - வட.கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்ற நடவடிக்கைகளைக் கவனிக்கவுள்ள உபகுழுவின் முதலாவது சந்திப்பு எதிர்வரும் 18ஆம் திகதி கிளிநொச்சி அரச அதிபர் செயலக வளாகத்திலுள்ள தனியான அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் தரப்பில் - அரசியல்துறைப் பொறுப்பாளர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவுக்குச் சிறைத்தீர்ப்பு; எதிர்த்து வெள்ளியன்று ஆர்ப்பாட்டம்!

### பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 200 வருட சிறைத் தண்டனை விதித்தமைக்கு எதிராக வெள்ளிக்கிழமை யாழ்.நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது. இதனையொட்டி யாழ்ப்பாண மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

அனைத்து மக்களுக்கும், அரச, அரசசார்பற்ற ஊழியர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கல்வி சார் அமைப்புக்களுக்கும், வர்த்தக,

(10ஆம் பக்கம் பார்க்க)

## தாளையடியில் வெடிபொருள்கள் அழிப்பு!

(நமது நிருபர்)

பளை மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் இருந்து மீட்கப்பட்ட ஆறாயிரத்துக்கும் அதிகமான வெடி பொருட்கள் இன்று தாளையடியில் வைத்து அழிக்கப்படவுள்ளன. (01)

## மீண்டும் சண்டை வெடிக்கும் என்ற சந்தேகம் வேண்டாம்!

### மட்டு.-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ்

(மட்டக்களப்பு)

சமாதானப் பேச்சுக்கள் தோல்வியடையும் என்றோ, சண்டை மீண்டும் வெடிக்கும் என்றோ எவரும் சந்தேகம் கொள்ள வேண்டாம். தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் வழிநடத்தலில் விடுதலைப் போராட்டம் அரசியல் போராட்டமாக நடந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு.-அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவித்துள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து பேச்சு முடிவுகளுக்கு அமெரிக்கா, பிரிட்டன் வரவேற்பு!

### ஒஸ்லோ கூட்டத்திலும் அவை பங்கேற்கும்

(கொழும்பு)

தாய்லாந்தில் முடிவடைந்த அரசு - புலிகள் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் தமக்கு திருப்தி அளிப்பதாக அமெரிக்காவும் பிரிட்டனும் அறிவித்துள்ளன. இது தொடர்பான அறிவிப்பை கொழும்பிலுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் தூதரகங்கள் நேற்று வெளியிட்டன. பேச்சுக்கள் வரவேற்கத்தக்க வகையில் முன்னேற்றகரமாக அமைந்துள்ளன.

இதனால் ஒஸ்லோவில் மாத இறுதிப் பகுதியில் நடக்கும் உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் அமெரிக்காவும் கலந்துகொள்ளும் என அமெரிக்கத் தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் தூதரகம் அதன் அறிக்கையில், மனித நேய நிவாரண உதவி வழங்கும் நிலையில் பிரிட்டன் உள்ளதால் ஒஸ்லோ கூட்டத்தில் பிரிட்டன் பங்குபற்ற உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## இந்திய 'றோ' அதிகாரி கொழும்புக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கையின் புலனாய்வுத்துறையை மேம்படுத்தும் நோக்கோடு இந்தியாவில் உள்ள 'றோ' அமைப்பில் அங்கம் வகிக்கும் சதீஸ் டண்டர் கொழும்பு வந்துள்ளார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்த காலத்தில் இவர் கடமையாற்றியவர் என்றும், அவர் இங்குள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உடனடிப் பிரச்சினைகளுக்கே முதலிடம்

# கட்டம் கட்டமாக நகர்ந்த பின்பே அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வு!



### கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் - புலிகளுக்கும் இடையில் தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுக்களைச் சர்வதேசமே அவதானித்து வருவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. பயங்கரவாதத்திற்கு எதிரான உலக நிலைமை மற்றும் தென்னாசியாவின் தற்போதைய நிலைமையில் இந்த சமாதானப் பேச்சு முக்கியத்துவத்துடன் நோக்கப்படுகின்றது. இந்தப் பேச்சுக்கள் வெற்றியடையும் பட்சத்தில் இது சமாதானத்திற்கு ஆதரவான பிரிவினருக்கு கிடைத்த வெற்றியாகவே கவனிக்கப்படும். இவ்வாறு விடுதலைப்புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தப் போர் ஒரு முடிவுக்கு வந்து சமாதான நிலை ஏற்பட்டால் இதுவே உலகில் அனைத்து மோதல் நிலைமைகளுக்கும் ஓர் சாதகமான உதாரணமாக அமையும். இதன் காரணத்தினாலேயே சர்வதேசம் எமது பக்கம் தமது கவனத்தைத் திருப்பியிருக்கின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் உயர் தலைமை ஆகிய இரு தரப்பும் சமாதான முயற்சியில் இதய சுத்தியுடன் ஈடுபட்டுள்ளன. இப்படி ஓர் நிலை முன் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. மற்றையது, முதல் தடவையாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இம்முறை கிடைத்திருக்கின்றது. இது ஓர் முக்கிய விடயமாக நாம் கருதுகின்

(10ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
சர்வதேச சேவையில் உள்ள நாங்கள்
உங்கள் உள்நாட்டுச் சேவையிலும்
(சி-148) J/FT/P - 021 - 2223916, 0777 - 801038, CMB/ 505632

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் மாணவர் மலர், விருந்தினர் பக்கம்

# விவசாயிகளிடம் லஞ்சம் வாங்கினாராம் கமநலசேவை உதவி ஆணையாளர் கைது!

## லஞ்சத் தடுப்பு அதிகாரிகள் நடவடிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் இப்ராகிம் லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் விவசாயிகளுக்கான உழவு இயந்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஒரு லட்சம் ரூபா லஞ்சம் பெற்றதாகக் கிடைத்த புகாரை அடுத்து லஞ்ச ஊழல் ஆணைக் குழு அதிகாரிகள் இவரைக் கைது செய்யச் சென்றனர்.

லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரி வேறொருவரின் மோட்டார் சைக்கிளில் இவரைத் தேடிச் சென்ற போது வழியில் போக்குவரத்துப் பொலிஸார் ஒருவர் தடுத்து நிறுத்தியுள்ளார்.

உரிய ஆவணங்கள் இன்றி இருந்த இந்த மோட்டார் சைக்கிளை விடுவிப்பதற்கு போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரியும் லஞ்சம் கேட்டதாகவும் இதனால் அவரையும் கைது செய்த லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள், தொடர்ந்து சென்று கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளரையும் கைது செய்துள்ளனர். (04)

# சர்வதேச பாலர் பாடசாலை விரைவில் யாழ்ப்பாணத்தில்

(மானிப்பாய்)

சர்வதேசதரத்துடன் கூடிய பாலர் பாடசாலை ஒன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு இலங்கை ஏழாம் நாள் திருச்சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இச்சர்வதேச பாலர் பாடசாலை இலங்கை ஏழாம் நாள் திருச்சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கவுள்ளது. யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ள முதலாவது சர்வதேச பாலர் பாடசாலை இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (100)

# கிறிஸ்து பிறப்பு இலக்கியப் போட்டிக்கு பாண்டியன் தாழ்வு இளைஞர் மன்றம் ஏற்பாடு

(பாண்டியன்தாழ்வு)

கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு-பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய இளைஞர் மன்றத்தினால் இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கட்டுரைப் போட்டி, "சமாதானத்தை நோக்கிய பயணத்தில் கிறிஸ்துவின் பிறப்பு" என்ற தலைப்பில் நடத்தப்படவுள்ளது. இப்போட்டியில் பங்கு பெறவிரும்புவோர் 350 சொற்களிற்கு மேற்படாமல் கட்டுரைகளை எழுதி அனுப்பலாம்.

கவிதைகள், "உண்மை அன்பில் ஒன்றாவோம்" எனும் தலைப்பில், 40 வரிகளுக்கு மேற்படாத வகையில் மரபு அல்லது புதுக்கவிதையாக அமையலாம்.

சிறுகதை, முழுமனித விடுதலையை மையப்படுத்தியதாக ஏ4 தாளில் 4 முதல் 6 பக்கங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர், தமது விண்ணப்பங்களை டிசம்பர் 12 ஆம் திகதிக்கு முன்னராக, "கிறிஸ்து பிறப்பு பெருவிழாப் போட்டி" இளைஞர் மன்றம், புனித அன்னம்மாள் ஆலயம் பாண்டியன்தாழ்வு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (65)

# வலிகாமம் மேற்கின் தேவைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படும்

## சிவாஜிலிங்கம் எம்.பி. உறுதி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப்பகுதி மக்களின் அத்தியாவசிய தேவைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வலிகாமம் மேற்குப்பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார். மேற்படி கூட்டத்தில் இப்பிரதேச செயலர் பிரிவில் தற்போது நிலவும் பல்வேறு அத்தியாவசியப் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

வீடமைப்பு, மின்விநியோகம், உணவு விநியோகம், வீதி புனரைப்பு, கல்வி, சுகாதாரம், மருத்துவம் ஆகிய துறைகள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவான முறையில் ஆராயப்பட்டது.

இவற்றை விட மக்களின் மீள் குடியமர்வு தொடர்பாகவும், உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. பொதுமக்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்குவது குறித்தும் ஆராயப்பட்டது.

மேலும் பிரதேச செயலக ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்தும் சிவாஜிலிங்கத்திடம் எடுத்துக் கூறப்பட்டது. குறிப்பாக இப் பகுதிகளில் கடமைபுரியும் கிராம அலுவலர்களுக்குத் தேவையான அலுவலகத தளபாடங்கள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுத்தரும்படியும், வரி விலக்குக்கூடான மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்து தரும்படியும் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

மேற்படி அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிவாஜிலிங்கம் உறுதியளித்துள்ளார். (க)

## குடத்தனையில் நியாப் கலந்துரையாடல்

(வடமராட்சி கிழக்கு)

நியாப் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்குப் பகுதியில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் 10ஆம் திகதி குடத்தனையிலுள்ள றோ.க.த.க. பாடசாலையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. (17)

## தென்மராட்சி வர்த்தகர்கள் பதிவு செய்க

(சரசாலை)

நாவற்குழி தொடக்கம் ஆனையிறவு வரையான பகுதிகளில் உள்ள சகல வர்த்தக நிலையங்களும் 10ஆம் திகதிக்கு முன்னராக-தமது வியாபார நிலையப் பதிவுகளை அவ்வப் பிரிவிலுள்ள வணிகர் மன்றங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு, பிரதேச வணிகர் மன்றங்களின் ஒன்றியத்தலைவர் ந.சற்குணராசா அறிவித்துள்ளார். (34)

# காட்டுப்பன்றி தாக்கி கணவன், மனைவி காயம்

வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோவில் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவரைக் காட்டுப் பன்றி தாக்கியது.

நேற்று நடந்த இச்சம்பவத்தில் காயமடைந்த கணவனும் மனைவியும் வரணி மத்திய மருந்தகத்தில் சிகிச்சை பெற்றுச் சென்றனர். (28)


திறைஞ்சனாஸ் சங்கானை

நிறைஞ்சனாஸ் ரசிகர்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள்

05-11-2002 தொடக்கம்

காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00

விஜய். சிம்ரன் நடித்த துள்ளாத மனமும் துள்ளும்

சனி. ஞாயிறு மட்டும் இரவு 8.45 காட்சி

"FINAL FIGHT"

(கராட்டிப் படம்) (சி-139)



ராஜா யாழ்ப்பாணம்.



தீபாவளி வெளியீடு

அஜித் (இரட்டை வேடம்) கிரண், மீனா நடித்த

வில்லன்

காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30

இயக்கம்: K.S.ரவிக்குமார். (சி-151)


## சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள சவாரி மாடு (நாம்பன்) விற்பனைக்குண்டு. இறைச்சிக்காகக் கொடுக்கப்பட மாட்டாது.

தொடர்பு-
பால்சாலை,
No:-21, கொழும்புத்துறைவீதி,
சுண்டுக்குளி,

(சி-155)


## இன்றைய நாள் இனிய நாள்

### 06.11.2002 - புதன்கிழமை

**மேடம்** :- தேவையற்ற பயம், தேகசுகக் குறைவு, சண்டை, அளவுக்கு மிஞ்சிய ஆசை, புதிய காரியங்களில் ஈடுபடல் தவிர்க்க வேண்டும், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- தெய்வதரிசன பலன், மனமகிழ்ச்சி, மங்கள காரியங்களில பங்கு, உறவினர் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார மத்திமம்.

**மிதுனம்** :- எடுத்த காரியம் வெற்றி, பணவரவு, மங்கள காரியங்களில் பங்கு, எதிரி தலைகுனிவு, தெய்வ சேவையில் புகழ், அறிஞர் உறவு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் மத்திமம்.

**கர்க்கடகம்** :- தெய்வ சேவையில் புகழ், புத்திரர் மகிழ்ச்சி, சமயநூல்கள் படித்தல், ஆடையாபரண மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்** :- மாதா சுகக்குறைவு, வைத்தியச் செலவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, வீண் அலைச்சல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் வெற்றி, பணவரவு, மங்கள வைபவங்களில் பங்கு, விதம் விதமான ஆடை அணிவதில் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்** :- மனச்சஞ்சலம், வரவுக்கு மிஞ்சிய செலவு, வீண் வாக்குவாதம், கண்ணில் சிறிது ரோகம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் மந்தநிலை.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, வரவுக்கேற்ற செலவு, மங்கள வைபவங்களில் பங்கு, விருந்தினர் வருகை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**தனு** :- தேகசுகக் குறைவு, வீண்செலவு, மனச்சஞ்சலம், மௌனமாக இருப்பது நன்று, தொழில் முன்னேற்றம், புகழ், மங்கள வைபவங்களில் பங்கு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- மனமகிழ்ச்சி, பணவரவு, தெய்வதரிசனம், மங்கள வைபவங்களில் பங்கு, பெண்களால் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- மனமகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம், தெய்வ சேவையில் மதிப்பு, சமய அறிஞர் உறவு, மங்கள வைபவங்களில் பங்கு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமம்.

**மீனம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, பிதா மகிழ்ச்சி, கௌரவம் தெய்வதரிசன பலன், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

# யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு நமது ஈழநாட்டின் இலவசப் பிரதிகள்!

யாழ்.மாவட்டத்திலுள்ள 50 சனசமூக நிலையங்களுக்கு

'நமது ஈழநாடு'

ஒரு மாதகாலத்திற்கு இலவசப்பிரதிகளை அனுப்பவுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்**

கீழுள்ள கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எதிர்வரும் 15.11.2002 ற்கு முன்னதாக

'நமது ஈழநாடு' -

*267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

* குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 50 சனசமூக நிலையங்களின் விபரம் 17ஆம் திகதிய நமது ஈழநாட்டில் வெளியாகும்.
* தேர்ந்தெடுக்கப்படும் சனசமூக நிலையங்களுக்கு வரும் 20.11.2002 இலிருந்து 20.12.2002 வரை இலவசப் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

**உங்களுக்கான கூப்பன் இதோ!**

**நமது ஈழநாடு இலவசப் பிரதித் திட்டம்**

சனசமூக நிலையத்தின் பெயர் : ..................................

பதிவு இலக்கம் : ..................................

முகவரி : ..................................

நூல் நிலைய வசதி : உண்டு / இல்லை

இலவசப்பிரதியை பெறக்கூடிய அருகிலுள்ள 'நமது ஈழநாடு' பத்திரிகை முகவர்

: ..................................

.............................. ..............................

தலைவர்/ செயலாளர் ஒப்பம் (சனசமூக நிலைய முத்திரையுடன்) திகதி

# கட்டுநாயக்காவில் சேதமாக்கப்பட்ட விமானங்கள்

# 48 லட்சம் ரூபாவுக்கு இரும்பு வியாபாரிக்கு விற்பனை!



(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் விமானப் படைத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின்போது சேதமாக்கப்பட்ட எயார்பஸ் விமானங்களின் உதிரிப்பாகங்கள் பழைய இரும்புகளைக் கொள்வனவு செய்யும் வியாபாரிக்கு விற்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ் நாட்டின் எயார்பஸ் கொம்பனியிடம் இருந்து சுமார் 3000 கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டு - தாக்குதலில் சேதமடைந்த விமானங்களின் சிதைவுகளே விற்பனை செய்யப்பட்டுள்ளன.

48 லட்சம் ரூபாவுக்கு இந்த உதிரிப்பாகங்களை பழைய இரும்புகளைக் கொள்வனவு செய்யும் வியாபாரி ஒருவர் வாங்கியுள்ளார். முற்றாக நாசமான இந்த விமானங்களில் இருந்து அலுமினியம் மற்றும் உலோகப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காகவே இவற்றை அந்த இரும்பு வியாபாரி கொள்வனவு செய்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, 1995 ஒக்டோபரில் கொலன்னாவவில் உள்ள எரிபொருள குதங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது சேதமடைந்த கொள்கலன்களும் பழைய இரும்புகளை வாங்கும் வியாபாரிக்கு விற்கப்பட்டுள்ளன.

29 மில்லியன் ரூபாவுக்கு இந்தக் கொள்கலன்களை அரசாங்கம் விற்பனை செய்திருப்பதாகத் தெரியவருகின்றது.

## கிளி.தொழில்நுட்ப கல்லூரி இன்று முதல் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உயர்தொழில் நுட்பக் கல்லூரி இன்று முதல் இயங்குவதற்கான அனுமதிகள் கிடைத்துள்ளது என்று பணிப்பாளர் ந.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இக்கல்லூரியை அரசு பொறுப்பேற்பதுடன், எதிர்காலத்தில் பல்வேறு திட்டங்களையும், பயிற்சிகளையும் நடைமுறைப்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (96)

## மலேரியா தடுப்பு ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு இடைநிறுத்தம் ரத்து!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதி மாகாணச் சுகாதாரச் சேவைகள் பணிப்பாளரின் கீழ் கடமைபுரியும் மலேரியா தடுப்பியக்க பொதுச்சுகாதார வெளிக்கள உதவியாளர்கள் வருடாந்தச் சம்பள உயர்வுகள், வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தி அடையாததால் 1998ஆம் ஆண்டிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

தற்பொழுது இவர்களுக்கு இப்பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இதனால் இவர்களுக்கு 1998ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆண்டு வரையுள்ள சம்பள உயர்வுகள் வழங்குவதற்கு .நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இருந்தபோதிலும் 1998, 2001இல் அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட வினைத்திறன்காண் பரீட்சையில் இவர்கள் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (108)

## மட்டக்களப்பில்

# கேணல் கருணா அடுத்தவாரம் படை அதிகாரிகளை சந்திப்பார்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. - அம்பாறை பிராந்தியத்துக்கான விசேட தளபதி கேணல் கருணாவுக்கும், அப்பகுதி விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று அடுத்த வாரம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பில் இடம்பெறவுள்ள இந்தச் சந்திப்பில் புலிகள் தரப்பில் மேலும் சில உயர்மட்டத் தளபதிகளும் கலந்துகொள்வார்கள் எனவும், விசேட அதிரடிப்படையின் அதிகாரிகளுடன், இராணுவ உயரதிகாரிகளும் கலந்து கொள்ளலாம் எனவும் தெரியவருகின்றது.

இப்பேச்சுக்கள் அடுத்த வாரம் செவ்வாய் அல்லது புதன் கிழமை இடம்பெறும் எனத் தெரியவருகின்றது. தாய்லாந்திலிருந்து வன்னி திரும்பியதும் கேணல் கருணா, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்த பின்னர், நடைபெறவுள்ள இந்தச் சந்திப்புக்காக மட்டக்களப்புக்குச் செல்வார்.

தாய்லாந்துப் பேச்சுக்களில கிழக்கு மாகாண நிலைமைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இந்தச் சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்படவிருக்கின்றது.

இச்சந்திப்புக்கான ஒழுங்குகளை சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் மேற்கொள்வர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## காஞ்சிரங்குடா முகாம் பலப்படுத்தப்படுகிறது

(அம்பாறை)

காஞசிரஙகுடா விசேட அதிரடிபபடை முகாமின பாதுகாபபு மிகவும பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

கடநத வாரம முதல இமமுகாமின காவலரணகள பலபபடுததபபடடு வருவதுடன் புதிய பல காவல ரண்களும் அமைக்கப்பட்டு வரு கின்றன. அததுடன படையினாின எணணிககையும இமமுகாமில அதி காிககபபட டுளளது. அணமையில ஆாபபாடடமொனறைத தொடாநது இமமுகாமில இருநது நடததபபடட தாககுதலில ஏழு அபபாவப் பொதுமககள படுகொலையானது தொிநததே. (08)

## காஞ்சிரங்குடா முகாம் பொறுப்பதிகாரியும் 13 படையினரும் உடனடியாக இடமாற்றம்

(கொழும்பு நிருபர்)

அம்பாறை மாவட்டம் காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமின் பொறுபபதிகாரி உள்ளிட்ட 14 விசேட அதிரடிப்படையினர் உடனடியாக இடமாறறம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமின் முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது ஏழு அப்பாவிப் பொதுமக்கள் அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வரும் சூழலிலேயே, இம்முகாமின் பொறுப்பதிகாரியான எரிக் பெரேரா மற்றும் 13 அதிரடிப் படையினர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் முதல் இந்த இடமாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த இடமாற்ற உத்தரவை விசேட அதிரடிப்படைக்குப் பொறுப்பான கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் குணதிலக பிறப்பித்துள்ளார்.

கிழக்குமாகாண நிலைமைகள் குறித்து தாய்லாந்தில் நடத்தப்பட்ட பேச்சுக்களின் பின்னர் இந்த உத்தரவு வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வளலாய் – இடைக்காடு மயானங்கள் பயன்படுத்த படையினர் அனுமதிமறுப்பு

(அச்சுவேலி)

வளவாய் கூளங்காடு மயானம், மற்றும் இடைக்காடு சாமித்திடல் மயானம் ஆகியன - இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருப்பதனால் - குறிப்பிட்ட மயானங்களைப் பொதுமக்கள் பாவிப்பதற்கு படைத்தரப்பு அனுமதி மறுத்துள்ளது.

இதனால் மேற்கூறப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் 4 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள- பத்தமேனி மயானத்திற்கே சடலங்களை எடுத்துச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே இது தொடர்பாக பல முறை உரியவர்களிடம் முறையிட்ட போதும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டு. வைத்தியசாலையில்

# அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு ரூ.2.8 மில்லியன் ஒதுக்கீடு

(களுவாஞ்சிக்குடி)

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அதிதீவிரச் சிகிச்சைப் பிரிவினை மேலும் விஸ்தரிப்பதற்கு 28 லட்சம் ரூபாவை சுகாதார அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுவரை காலமும் 5 கட்டில்களை மட்டுமே கொண்டிருந்த அதிதீவிர சிகிச்சைப்பிரிவு 12 கட்டில்களை கொண்டதாக விஸ்தரிக்கப்படவுள்ளதாக ஆஸ்பத்திரிப் பணிப்பாளா தேவராஜன் தெரிவித்துள்ளார்.

## மீனவருக்கு புதிய ஐஸ் தொழிற்சாலை குடாநாட்டில் நிறுவ நொராட் உதவி

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீன் பிடித்துறையை விருத்தி செய்வதில் மேற்கொள்ளப்பட இருக்கும் ஆராய்ச்சி வேலைகளுக்கென நொராட் நிறுவனம் 34 லட்ச ரூபாவை வழங்கியுள்ளது.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவின் வேண்டுகோளின் பேரில் இரண்டு நிபுணர்களின் சேவையையும் நொராட் நிறுவனம் வழங்கியுள்ளது.

நிலைமை ஆராயப்பட்ட பின்னர் இரண்டு ஐஸ் உற்பத்தி ஆலைகள் அமைக்கப்படவிருக்கின்றன. இந்த ஆலைகளை இயக்குவதற்கென நொராட நிறுவனம் 2 கோடி ரூபாவை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

1983க்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பதினொரு ஐஸ் உற்பத்திச் சாலைகள் இயங்கி வந்தன. ஆனால யுத்தநிலை காரணமாக ஒரே ஒரு ஐஸ் உற்பத்திச்சாலையே இயங்கி வருகின்றது. மீனவர்களுக்கு இலுவைப்படகுகள், வலைகள் மற்றும் உபகரணங்களை வழங்கவேண்டிய அவசியத்தை நொராட் நிபுணர்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள்.

### மின் இணைப்புக்காக தறிக்கப்படவுள்ள மரங்கள்

(காங்கேசந்துறை)

இளவாலைப் பகுதிக்கான மின்சாரம் வழங்குவதற்கு உயர்வலுக் கொண்ட மின்மார்க்கத்தை அமைப்பதற்காக பயன்தரு மரங்கள் பல அழிக்கப்படவுள்ளன.

இதற்காக 97 பனை, தென்னை மரங்கள் ஐந்து வேப்பமரங்கள், மூன்று பலா மரங்கள் ஆகியவற்றுக்கு இலங்கை மின்சாரசபை அடையாளமிட்டுள்ளது. (71)

# ஒந்தாச்சி மடத்தில் வானில் இருந்து தரையிறங்கிய மர்மப்பொருள் என்ன?

## பொதுமக்கள் மத்தியில் பரபரப்பு!

(களுவாஞ்சிக்குடி)

களுவாஞ்சிக்குடி - ஒந்தாச்சி மடத்தில் கடந்த ஞாயிறன்று இரவு தரையிறங்கிய மர்மப்பொருளால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கின்றது.

ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் பச்சைநிற வெளிச்சத்துடன் ஆறு அடி விட்டமுள்ள வட்ட வடிவமான பொருளொன்று ஒந்தாச்சி மடத்தில் தரையிறங்கி விட்டு, பறந்து சென்றுதாகச் கூறப்படுகின்றது.

இந்த மர்மப்பொருள் தரையிறங்கியதை வாழைச்சேனை - காகித ஆலைப் பொறியியல் பகுதி ஊழியரான தயாநிதி என்பவர் நேரில் கண்டதாகக் கூறியுள்ளார்.

மர்மப்பொருள் தரையிறங்கி இடத்தில் - மணலில் புகைபடிந்த அடையாளங்கள் தென்படுகின்றன. இந்த மர்மப்பொருள் தொடர்பான தகவல் வெளியானதையடுத்து ஒந்தாச்சி மடம், களுவாஞ்சிக்குடிப் பகுதிகளில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மர்மப்பொருள் தரையிறங்கியதாக கூறப்படும் இடத்தில் காணப்படும் புகைபடிந்த அடையாளங்களைப் பார்வையிடுவதற்காகப் பெருமளவானோர் அயற்கிராமங்களிலிருந்து ஒந்தாச்சி மடத்துக்கு படையெடுத்து வருகின்றனர்.

இதேவேளை சில மாதங்களுக்கு முன்னர் பொலனறுவைப் பகுதியில், தொடர்ச்சியாக இத்தகைய மர்மப்பொருட்களின் நடமாட்டத்தை அவதானித்ததாக அப்பகுதி மக்கள் புகார் செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## பேச்சுக்களில் கலந்து கொண்டோருக்கு ஓர்க்கிட் மலர்கள் வழங்கி கௌரவம்

(நமது நிருபர்)

இரண்டாவது கட்டச் சமாதானப் பேச்சுக்கள் வெற்றிகரமாக நடந்து முடிந்ததை அடுத்து பேச்சுக்களில் கலந்து கொண்ட மூன்று தரப்பினருக்கும் 'ஓர்க்கிட்' மலர்க்கொத்துக்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுக்கள் முடிவுற்ற பின்னர் றோஸ் கார்டன் ஹோட்டல் நிர்வாகமும் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சும் இணைந்து புலிகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசப் பிரதிநிதிகள், நோர்வே தரப்பினருக்கு ஓர்க்கிட் மலர்களை வழங்கியிருந்தன. (02)

## நான்கு தமிழ்க் கட்சிகள் பிரதமரைச் சந்திக்க முயற்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் நான்கு அரசியல் அமைப்புக்கள் விரைவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளன.

ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், சுபத்திரன் அணி மற்றும் ஈரோஸ் சங்கர் ராதி ஆகியோரே பிரதமர் ரணிலைச் சந்தித்திப்பதற்கான முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

# புலிகள் போரில் பிரியமானவர்களல்லர்; தெற்கிலுள்ள சகோதரரிடம் கூறுங்கள்!

## சுதந்திரப் பொதுத் தொழிலாளர் சங்க மாநாட்டில் கவியன்பன்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா சுதந்திர பொதுத் தொழிலாளர் சங்கத்தின் 5 ஆவது வருடாந்த மாநாடு நேற்று யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது.



தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன் உரை நிகழ்த்துகிறார். அருகில் மொழி பெயர்ப்பாளர்.

சிறிலங்கா சுதந்திர பொதுத் தொழிலாளர் சங்கத்தின் 5ஆவது வருடாந்த மாநாட்டில் யாழ். மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார், தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன், யாழ். ஸ்ரீநாகவிகாரை பௌத்த குரு, சிறிலங்கா சுதந்திர பொதுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நகி மகேஸ் பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட தமழீழ விடுதலைப் புலிகளின் கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் உரையாற்றுகையில் -

நீங்கள் இந்த சமாதான சூழலில் புழுதியற்ற, சேறுகள் சகதிகளற்ற ஏ-9 தரைப்பாதையூடாக இங்கு வருகைதந்துள்ளீர்கள். ஆனால் இந்த ஏ-9 பாதையிலே எங்களுடைய சகோதரர்களுடைய வியர்வையும், குருதியும் சிந்தப்பட்டிருக்கின்றது. இதன் மேலாலேதான் எமது சமாதானப் பயணமும் ஏ-9 பயணமும் ஒன்றிணைந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற மோதல்களும், ஆளை ஆள் புரிந்துகொள்ளாமையும் எப்படி வந்தன? நாங்கள் இதனை சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1950களில் இனவாத தீ மூண்டது. நாங்கள் இத்தீயை அணைப்பதற்கு எமது இரத்தத்தை தெளித்தோம். இதன் விளைவாக இப்போது இவ் இனவாதத் தீ சற்று தணிந்துள்ளது.

இவ் இனவாதத் தீ மூண்டபோதும்கூட எமது தலைவர்கள் உங்களுடன் ஒற்றுமையாக வாழ ஆசைப்படுவதாகத் தெரிவித்தனர். இத்தேசத்தில் உங்களுக்கு இருக்கும் உரிமை எமக்கும் இருக்கின்றது. எனவே எமது உரிமையைத் தாருங்கள் என்று கேட்டது பிழையா? என கவியன்பன் இவ் மாநாட்டில் கூடியிருந்த சிங்கள தொழிலாளர்களிடையே கேள்வி எழுப்பினார்.

திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த இனவாதத்தால்தான் நாங்கள் ஆயுதம் தூக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் பல மக்களையும், போராளிகளையும் இழக்க நேரிட்டது. அத்துடன் சிங்கள சகோதரர்கள் எமது பிரதேசத்தை ஆக்கிரமித்ததுடன் எமது மக்களையும் கொடுமைப்படுத்தினார்கள். இதனை நாம் அனுமதிக்க முடியாது என்பதனால்தான் அவர்களுடன் போரிடவேண்டி ஏற்பட்டது எனவும் கவியன்பன் குறிப்பிட்டார்.

மேலும் - நாங்கள் என்றுமே சமாதான விரும்பிகள். நாங்கள் கேட்பதெல்லாம் எங்களையும் உங்களைப்போல் வாழ விடுங்கள் என்பதுதான். நாங்கள் எமது மொழியுடனும், எமது பண்பாட்டுடனும் எமது மண்ணில் வாழவிடுங்கள் என்பதையே அன்றும் இன்றும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், இராணுவமோ மக்களின் வாழ்விடங்களை இன்றும் உயர் பாதுகாப்பு வலயம் எனக்கூறி ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றது. இதனால் மக்கள் தமது வீடுகளுக்கும், ஆலயங்களுக்கும் செல்ல முடியாதுள்ளது. நீங்கள் இங்குள்ள நிலைமைகளை தென்பகுதியில் ஓங்கி ஒலியுங்கள்.

தமிழ்மக்களோ விடுதலைப் புலிகளோ போர்ப் பிரியர்களல்லர். எமது உடலில் ஆயுதம் ஒரு அங்கமும் இல்லை. இதை நீங்கள் தெற்கிலுள்ள உங்கள் சகோதரர்களுக்கு சொல்லுங்கள்.

தற்காலிக சமாதானத்தில் சந்திக்கும் நாம், நிரந்தர சமாதானத்திலும் சந்திக்க வேண்டும். எங்கள் இடத்திற்கு நீங்கள் வரவேண்டும், உங்கள் இடத்திற்கு நாம் வர வேண்டும். இச் சந்தர்ப்பம் உருவாக எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன் தெரிவித்தார்.


இந்நிகழ்வில் - நாகவிகாரை பௌத்த குரு, மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார், மற்றும் சுதந்[illegible] தொழிலாளர் சங்கத்தின் பொதுச செயலாளர் நகி மகேஸ் பெரேரா, களுத்துறையைச் சேர்ந்த அரு[illegible] தந்தை அந்தோனி சிறில், களுத்[illegible] துறை கிராம சேவையாளர் சுனில் பெர்ணான்டோ ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

இந்த 5 ஆவது மாநாட்டின் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணத்திலுள்ள வறிய மக்களுக்கு உதவுவதற்கென 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை இத் தொழிலாளர் சங்கத்தின் காப்பாளர் அருட்தந்தை அந்தோனி சிறில், மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமாரிடம் கையளித்தார். தொடர்ந்து மாதாந்தம் தங்களால் இயலக்கூடிய நிதியை அனுப்புவதாகவும், இச் சங்கத்தின் பொதுச் செயலாளர் நகி மகேஸ் பெரேரா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தொ[illegible]லாளருக்கு சிறிலங்கா சுதந்திர[illegible] பொதுத் தொழிலாளர்கள் ஆதரவளிப்பதாகவும், விரைவில் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலு[illegible] இத் தொழிலாளர் சங்கத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் இத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

இச்சங்கத்தைச் சேர்ந்த 160 தொழிலாளர்கள் நேற்று முன்தினம் இங்கு வருகை தந்திருந்தனர். இவர்கள் இன்று கொழும்பு திரும்பவுள்ளனர்.

(லி)



ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் 5 ஆவது மாநாடு நேற்று யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் களுத்துறை கிராமசேவகர் சுனில் பெர்ணான்டோ, சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நகி மகேஸ் பெரேரா, அருட்தந்தை அந்தோனி சிறில் ஆகியோர் உரையாற்றுவதையும், இந்நிகழ்வின் ஞாபகார்த்தமாக, வறிய மக்களுக்கு உதவுவதற்காக பத்தாயிரம் ரூபா பெறுமதியான காசோலையை அருட்தந்தை அந்தோனி சிறில், மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமாரிடம் கையளிப்பதையும், இந்நிகழ்விற்குக் வருகைதந்த சுதந்திர தொழிலாளர் சங்க உறுப்பினர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- லிவிங்ஸ்டன்)

## - அரியாலைப் பகுதியில் -

# வாய்க்கால்களைத் தடுக்கும் காவலரணகள்; அகற்ற உதவுமாறு மாநகர சபையிடம் முறையீடு!

(நெல்லியடி)

இராணுவக் காவலரண், தண்ணீர் ஓடும் வாய்க்கால்களைத் தடைசெய்வதால் குடியிருப்புக்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாய நிலை தோன்றியுள்ளதாக, அரியாலை மக்கள் யாழ்.மாநகர சபையிடம் முறையீடு செய்துள்ளதோடு, உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளனர். இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

நவாஸ் வீதியின் வடக்குப் பக்கத்தில் உள்ள வடிகால்களும், கண்டி வீதியின் கிழக்குப் பக்கத்தில் இருந்து வரும் வடிகால்களும் தடைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இத்தடைக்கு மாம்பழம் சந்தியில் இருக்கும் படையினரின் காவலரணே காரணமாகும். இந்த வடிகால்கள் ஊடாக வரும் நீர், மாம்பழம் சந்திப் பகுதியில் இருக்கும் பிரம்பன் குளத்தில் சேர்கின்றது.

வடிகால்கள் தடைப்பட்டிருப்பதால் வெள்ள நீர், மக்கள் குடியிருப்புக்குள் உட்புகும் அபாயநிலை தோன்றியுள்ளது. தற்போது மக்கள் அந்தப்பகுதிகளில் மீளக் குடியமர்ந்து வருவதால் இந்த வாய்க்கால்களின் தடைகளை நீக்கி, மக்களின் குடியிருப்புக்கள் சேதமடையாவண்ணம் நடவடிக்கை எடுக்கும்படி - அரியாலை மத்தி, அரியாலை வடமத்தி, அரியாலை வடமேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள், யாழ். மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (13)

# தற்காலிக தகரக் கொட்டகையில் சாவகச்சேரி மீன் சந்தை!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மீன் சந்தை, தற்போது அயலில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக தகரக் கொட்டகை ஒன்றிற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யுத்த அனர்த்தத்தினால் மிகவும் மோசமாகச் சிதைவடைந்திருந்த கட்டடத் தொகுதியிலேயே மீன் சந்தை இயங்கி வந்தது. தற்போதைய பருவமழை காரணமாக அக்கட்டடத்தினுள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் தற்காலிக தகரக் கொட்டகையில் மீன்சந்தை இயங்கி வருகின்றது.(29)

# ஊனமுற்றோருக்கு ஜி.ரி.இசற். உதவி

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள ஊனமுற்றவர்களுக்கு சக்கரநாற்காலி, முச்சக்கரவண்டி, ஊன்றுகோல் என்பன ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ளதாக, வடமராட்சி ஊனமுற்றோர் சங்கச் செயலாளர் சி.சின்னத்தம்பி தெரிவித்துள்ளார்.

இந்நிறுவன அதிகாரிகள் அண்மையில் ஊனமுற்றோர் சங்கத்தினரைச் சந்தித்து கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்தனர்.

எனவே, இவ்வுதவிகள் தேவையானோர், தமது விபரங்களைப் பதிவு செய்யுமாறு வடமராட்சி ஊனமுற்றோர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (23)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மூலச் சான்றிதழ்களைப் பெறலாம்

(கோப்பாய்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 1993/94, 1994/95, 1996/97, 1997/98, 1998/99 ஆகிய கல்வியாண்டுகளில் - ஆசிரியப் பயிற்சியினை மேற்கொண்ட ஆசிரிய மாணவர்களுக்கான மூலச்சான்றிதழ்கள் கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனவே இக்காலப் பகுதியில் பயிற்சிபெற்ற சகல ஆசிரியர்களும், தேசிய அடையாள அட்டையுடன் - எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலையில் வந்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளும்படியும், எக்காரணம் கொண்டும் முகவர்கள் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படமாட்டாது எனவும் - கலாசாலை அதிபர் எம். பரஞ்சோதி தெரிவித்துள்ளார்.

# மீளக் குடியமரும் விவசாய மக்களுக்கு பட்டினிக்கு எதிரான நிறுவனம் நிதியுதவி

வன்னியில் இருந்து வந்து மீளக் குடியமரும் விவசாய மக்களுக்குப் பட்டினிக்கெதிரான நிறுவனம் விவசாய உபகரணங்களையும், விதைகளையும் வழங்கி வருகின்றது.

இதனூடாக மீளக்குடியேறும் விவசாயிகள் மற்றும் வீட்டுத்தோட்ட செய்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கின்றது என்று இம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

(96)

## புன்னாலைக்கட்டுவன் ஆலயத்தில்

# நான்காவது தடவையாகவும் கோயில் உண்டியல் திருட்டு!

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் ஆலயத் திருப்பணி உண்டியல்கள் மீண்டும் உடைத்துத் திருடப்பட்டுள்ளன. ஒரு உண்டியலில் இருந்த பணம் முற்றுமுழுதாக எடுக்கப்பட்டதுடன், மற்றைய உண்டியல் பூட்டு உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இது தொடர்பாக ஆலய பரிபாலன சபையினர் சுன்னாகம் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர். இக்கோயிலின் திருப்பணி உண்டியல்கள் இந்த வருடத்தில் நான்கு தடவை உடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(83)



# மாணவர் மலர்

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2002
## கணிதம் I

### மாதிரி வினாத்தாள் 2

01) 22.5m நீளமும், 15m அகலமுமான காணியை சுற்றி 75cm இற்கு ஒன்றென கம்பங்கள் நடப்படுகின்றன.
   1. எத்தனை கம்பங்கள் தேவைப்படும்?
   2.

   எவ்வளவு நீளமான முட்கம்பி தேவை?

02) ஒரு செவ்வகத்தின் நீளத்துக்கும் அகலத்துக்கும் இடையான விகிதம் 3:2 ஆகும். அதன் பரப்பளவு $150cm^2$ எனின் செவ்வகத்தின் சுற்றளவைக் காண்க?

03) 78x96=7488 எனின் $\frac{7.488}{0.96}$ இன் பெறுமானம் யாது?

04) $\sqrt{20x^2} - \sqrt{py^2} = \sqrt{5}(2x-3y)$ எனின் p இன் பெறுமானம் எவ்வளவு?

05) $\frac{1}{3+\sqrt{2}}$ என்பதைப் பகுதி எண் விகிதமுறு எண்ணாக உள்ள பின்னமாகத் தருக?


06) Y= 3x-5 என்னும் கோட்டின் எப்பகுதியில் உற்பத்திப் புள்ளி அமைந்துள்ளது?

07) 1. a sinθ= b cosθ எனின் tanθ ன் பெறுமதியைக் காண்க?
   2. a=b எனின் θன் பெறுமானம் யாது?

08) $Log_{10}{}^{1.995}=0.3$ ஆயின் $Log_{10}{}^{199.5}$ன் பெறுமதி யாது?

09) சுருக்குக $\frac{2^{3.0} x 4^{-1.2}}{\sqrt{8^{0.4}}}$

10)





11) ஓர் எண்ணை 12%னால் குறைத்த பின் 8% ஆல் அதிகரிக்க வேண்டும் எனில் எந்த எண்ணினால் பெருக்க வேண்டும்?

12) $Y= \frac{4pr}{x+2s}$ என்பதில் sஐ எழுவாயாக மாற்றுக?

13) (2x-3)(x+a) =0 என்ற சமன்பாட்டின் தீர்வுகள் 3/2, 5 எனின் aயின் பெறுமானத்தைக் காண்க?


14) ABCD ஓர் வட்ட நாற்பக்கல், O வட்டத்தின் மையம் $F\hat{A}D=3x^{\circ}$, $B\hat{C}E=2x^{\circ}$, $B\hat{O}D=y^{\circ}$ எனின் x, yன் பெறுமானங்களைக் காண்க?




15) a+b=7, ab=12 எனின்
$a^2+b^2$ இன் பெறுமதியைக் காண்க?


16) $28x^2y$, $40xy^2$, $6x^3y$ என்பவற்றின் பொ.ம.சி. யாது?

17) தரப்பட்ட உருவில் சதுர அடியைக் கொண்ட கூம்பகத்தில் AB=45cm, AE=45cm எனின் கூம்பகத்தின் குத்துயரத்தை காண்க?




18) 10 ரூபா முகப் பெறுமதியான பங்குகளை 13 ரூபாப்படி வாங்குதவற்கு ஒருவர் 6500 ரூபாவை முதலீடு செய்து 600 ரூபாவை இலாபமாக பெற்றால் அவர் அடையும் சதவீத இலாபம் கம்பனி வழங்கும் சதவீதத்தை விட எவ்வளவு குறைவாகும்?

19) தரப்பட்ட வரைபிலிருந்து
PQன் சமன்பாட்டைக் காண்க?




20) nஇன் அதிகூடிய முழு எண் பெறுமானத்தைக் காண்க?
$(n-2)+3(n+2) \leqslant 16$

21) வாடகைக் கொள்வனவு முறையில் பொருளொன்றுக்கு எஞ்சிய 5400 ரூபா தொகை, 18 சமனான மாதக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். அதற்கேற்ப சம தவணைக் கட்டணம் 340 ரூபா செலுத்தப்படின், செலுத்தப்படும் ஆண்டு வட்டி வீதம் எவ்வளவு?


22) 6x+2y=16
4x-2y=18 ஆகிய சமன்பாடுகளைத் தீர்க்காது x+2y இன் பெறுமானத்தைக் காண்க?

23) $y=4-(x-3)^2$ என்னும் வளையி உயர்வுப்புள்ளியையா? இழிவுப் புள்ளியையா கொண்டுள்ளது? அப்புள்ளி எது?

24) 3இற்கும் 192இற்கும் இடையே இரு பெருக்கல் இடைகளைக் காண்க?


25) 8, 14, 12, 6 இன் இடை aயும், 8, 11, 9, x இன் இடை (a-1) உம் எனின் xன் பெறுமதியைக் காண்க?

26) அருகே உள்ள உருவில் PQ இன் நீளத்தை a, θ,∝ இல் தருக?




27) பொருளொன்று சேதமடைவதற்கான நிகழ்தகவு 3/7 ஆகும். அடுத்தடுத்த மூன்று தடைவைகளில் சேதமடையாமைக்கான நிகழ்தகவு யாது?

28) தரப்பட்ட மரக்குற்றியின் உயரம் 30cm, கனவளவு $20,790cm^3$ எனின் ஆரை எவ்வளவு?




29) தந்தையின் வயது மகளின் வயதின் மும்மடங்கிலும் 5 ஆண்டுகள் கூட ஆகும். அவர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை 77 ஆண்டுகள் எனின் இருவரது வயதுகளையும் கணிக்க?


30) வாகனம் ஒன்று $2\frac{1}{2}$ மணி நேரத்தில் 120km தூரத்தை அடைந்தது. பின்னர் 32km/h கதியில் 45 நிமிடங்கள் சென்று குறித்த இலக்கை அடைந்தது. வாகனத்தின் முழுப்பயணத்துக்குமான கதியைக் காண்க?

பொன்னுத்துரை
சூரியப்பிரகாஸ்
மட்டுவில் தெற்கு அ.மி.த.க
பாடசாலை, சாவகச்சேரி.

# GENERAL CERTIFICATE OF EDUCATION (ORD.LEVEL) EXAMINATION

(NEW SYLLABUS)

## *International Language (Second Language) English*




PART - I

*Answer ALL the questions on this paper itself.*

01. You have just returned to school after a nice vacation. You want to tell your friends how you planned your vacation. You wrote out the details. But they are in the wrong order. Put them in the correct order by writing the correct number in each cage. No.1 has been done for you.

*(Time 5 minutes)*

(a) We planned our vacation carefully, With the help of our parents. [ 1 ]

(b) Then my Father telephoned some hotels to make reservations. He found a good hotel and told them about the duration of our stay and meals. [ ]

(c) Vacation time finally arrived and we were off for a good time. [ ]

(d) After the test my sister and I decided which places we wanted to go to. We had little difficulty because our interests were the same. [ ]

(e) First my parents gave us a list of places we might visit. That was on a Tuesday. I was having a maths test the next day. [ ]

(f) After that my mother borrowed a guide book from the library so that we'd know how to find the interesting places and reach them by car. [ ]

02. Read the following passage and the statement given below. Put a tick (✓) in the box against the True statements and a cross (✕) in the box against the false ones.

*(Time 5 minutes)*

ANTELOPES

The antelopes are related to cattle. They run swiftly on two hoofed toes and like cows they feed on grass. Unlike deer antelopes never shed their horns. Some of the antelopes like the oryx have powerful straight horns.

There are antelopes in Africa and Asia. Most live in herds on grassy plains. But some kinds prefer forests or marshes. Antelopes migrate in search of fresh grass during the dry season. They must always be on the look out for danger. Lions, Cheetahs, Leopards and wild dogs all hunt antelopes. But antelopes have keen eye sight and even the young ones can run quickly.

| Statements | True | False |
|---|---|---|
| 1. Both the deer, and the antelopes sheds their horns. | | |
| 2. Antelopes move from place to place in search of grass. | | |
| 3. Young Antelopes cannot run fast. | | |
| 4. Antelopes are not hunted by other animals. | | |
| 5. The oryx is an Antelope. | | |

03. Today is the 27th of August. These are the entries made by Renuka in her diary during the last five days. Read them and answer the following questions by writing Yes or No in the box provided.

*(Time 10minutes)*

| August 1993 | |
|---|---|
| 22nd Sunday | : Washed my clothes. Went to the library. Borrowed an interesting book. Read 25 pages. |
| 23rd Monday | : Received a letter from my pen friend Susan in England. Uncle sirisena Arrived. Late Dinner. I couldn't read the book. |
| 24th Tuesday | : Visited grandmother in hospital. she is better. Read another hundred pages in the book. |
| 25th Wednesday | : Stayed after school for netball practice. Had a fall and hurt my knee. Mother attended to it at home. |
| 26th Thursday | : Still in bed. Taking rest. Couldn't go to school. My knee hurts. Finished reading the book. Mala came to see me. |

1. Did Renuka receive any letter this week? [ ]
2. Was she able to read the book on Monday? [ ]
3. Is Susan an English girl? [ ]
4. Did she have any visitor this week? [ ]
5. Did she go to school on the 26th? [ ]

04. You have been given some letters to be handed over to the people whose names are on them. The Principal is Mr.Wimalasena. He is also the president of the school Development society. Miss.Loganathan is the school librarian and Mr.Aloysius, the teacher in charge of sports is the secretary of Old Students Association.

*(Time 10minutes)*

| | | |
|---|---|---|
| The teacher in charge of sports, Vijaya M.M.V., Kalutara. | The President, School Development Society, Vijaya M.M.V, Kalutara. | The Librarian, Vijaya M.M.V, Kalutara. |

| | |
|---|---|
| The Secretary, Old Students Association, Vijaya M.M.V., Kalutara. | The Principal, Vijaya M.M.V., Kalutara. |

Mr.Wimalasena [ ]

Mr.Aloysius [ ]

Miss.Loganathan [ ]

05. You want to become a member of your school library. Make an application to the librarian by filling in the following form.

*(Time 5minutes)*

Application for Membership

To be filled completely in block capital letters.

Name in Full :..........................................................

Home Address :..........................................................

..........................................................

Age :..........................................................

Class :.................. Division:..............................

Name of Class teacher :..........................................................

Name of Father :..........................................................

Father's occupation :..........................................................

.................. ..................

Date Signature

06. Read the following passage. Now rewrite this replacing 'He' with 'I'

*(Time 5minutes)*

He is a chauffeur. He knows the roads of Sri Lanka well. His Main work is driving his boss from place to place. He has to do this with great care. When he is not driving he looks after the car. He keeps it well polished and in good condition. He likes his job.

..........................................................

..........................................................

..........................................................

..........................................................



# நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com


**சிந்தனைக்கு**

*வாய்ப்புக்கள் எப்போதும் தேடிவருவதில்லை.*
*வாய்ப்புக்களை நாமாகத் தேடவேண்டும்.*
*- எட்வேர்ட் ஜெனர்*

# நமது நோக்கு

## சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவோம்!

மூன்றாம் நிலைக்கல்வியின் முக்கியத்துவம்- தமிழர்களைப் பொறுத்தவரையில் காலங் காலமாக உணரப்பட்டு வந்தாலும் - நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய தாக, மூன்றாம் நிலைக்கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் பல்கலைக் கழகக் கல்வியின் அவசியம் வலியுறுத்தப்படும் அதேயளவுக்கு - அக்கல்வியினூடாக புதிய உலகை அல்லது வெளியிலுள்ள சவால்களை சந்திக்கத் தேவைப்படும் வலுவை அக் கல்வியால் முழுமையாக உருவாக்க முடிய வில்லை என்பது வெளிப்படையானது. இது யாழ். பல்கலைக்கழகத்திற்கும் பொருந்தும்.

இதற்குப் பல காரணங்களையும் ஆராயலாம். அரசாங்கத்தின் வழியாக தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்படாத வாய்ப்புக்கள், யுத்தத்தின் பாதிப்பு, வெளியுலகுடனான தொடர்புகள் காலத்திற்குக் காலம் துண்டிக்கப்பட்டமை முதலாக பல்கலைக்கழக அளவில், புதிய வழிச் செலுத்துகைகளை, திறனாற்றுகைகளை உள் வாங்கிக் கொள்ள நிலவிய தயக்கம் வரை நாம் இங்கு கருத்திற் கொள்ள முடியும்.

ஆனால் - இன்று போர் ஓய்வுக்கு வந்த பின்னரும், அதே நிலையில் எமது சமூகத்தின் உயர் இலக்குக் கொண்ட கல்வித்தரத்தை அப் படியே வைத்திருக்கவும் முடியாது.

உலகின் வளர்ச்சிக்கு ஒத்துச்செல்லும் வகையில், நவீன உலகை மனத்திண்மையுடன், திறனுடன் எதிர்கொள்ளக்கூடிய வகையில் - மாணவர்களை உருவாக்கக்கூடியதாக மூன்றாம் நிலைக்கல்வியின் தரத்தை உயர்த்தும் வழிமுறைகளை ஆராய்ந்து அவற்றைச் செயற்படுத்த அனைவரும் முன்வர வேண்டும்.

மரபுசார்ந்த, துறைசார் கற்கை நெறிகளின் எல்லைகளுக்குள் மாணவர்களின் அறிவாற்றலை, தேடலை மட்டுப்படுத்திக் கொள்ளாது- கணினிசார் அறிவும், தலைமைத்துவப் பண்பும், தொடர்பாடற் திறனும், தொழில்சார் தேர்ச்சிக்கான பயிற்சியும் கொண்டவர்களாக மாணவர்களை தகவமைத்துக்கொள்வது இன்று அத்தியாவசியமானது.

இன்று ஏற்பட்டு வருகின்ற சமாதானச் சூழலின் பகைப்புலத்தைத் துணையாகக் கொண்டு- இந்தத் திறன்களை பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நாம் முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

உலக வங்கி உட்பட பல நிறுவனங்கள் இத்தகைய முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு உதவ ஆர்வம் கொண்டுள்ள நிலையில் - பல் கலைக்கழகச் சமூகமும், மக்களும் இந்த உதவிகளைச் சரிவர பயன்படுத்த முனைய வேண்டும்.

அதேவேளை - உலகவங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களின், செயற்பாடுகளை, இலக்குகளை - எமது சமூகத்திற்கேற்ற வகையில் வடிவமைத்து உள்வாங்குவதிலும் நாம் கவன முடையவர்களாக வேண்டும்.

எமது மண்ணுக்குப் பொருத்தமற்ற, எமது கலாசாரத்திற்கு முரண்பாடான விடயங்களில், மிகவும் நிதானத்துடன் செயற்பட்டு - எமது தனித்துவமும், வள ஆளுமையும், பண்பாட்டு கலாசார விழுமியங்களும் பாதிக்கப்படாத வகையில் புதிய பார்வைகளை, துணை புரிதல்களை உள்ளீர்த்துக் கொள்வதில் நாம் ஆர்வ முடையவர்களாக மாறவேண்டும்.

மாற்றங்கள் எமது அடித்தளத்தை மாற்றி விடாமல் - தரத்தையும், செழுமையையும் உயர்த்துபவையாக இருக்கும் பட்சத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்வதில் நாம் தயக்கம் காட்டத் தேவையில்லை என்றே கூறலாம்.

# நாற்பது லட்சம் ரூபா செலவில் குடாநாட்டில் புதிய செயற்திட்டங்கள்

## யு.என்.எச்.சி.ஆர் உதவி வழங்கத் தயார்

(அரியாலை)

யு.என்.எச்.சி.ஆரின் உதவியுடன் 40 இலட்சம் ரூபா செலவில் மேலும் ஐந்து நுண்கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பாக யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மாவட்டக் குழுக் கூட்டத்தில் இத்திட்டச் செயற்பாடுகளுக்கான அங்கீகாரங்கள் பெறப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின்படி தீவுப் பகுதிகளில் நோயாளிகளைக் கொண்டு செல்வதற்கான அம்புலன்ஸ் படகு கொள்வனவு செய்வதற்காக 29 இலட்சம் ரூபாவும், யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விதவைகளுக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்காக 2 இலட்சம் ரூபாவும, வலி.வடக்கு கட்டுவன் பகுதியில் மீளக்குடியமர்ந்த விவசாயிகளுக்கு - விவசாய உள்ளீடுகளை வழங்குவதற்காக ஒரு இலட்சத்து 33 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதோடு.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இளவாலைக் கிராம மக்களின் சுயதொழில் முயற்சிக்காக 4 இலட்சம் ரூபாவும், அரைநிரந்தரப் பொதுக்கட்டட அமைப்புக்காக 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் மேற்படி கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

# நயினாதீவு செல்லக் காத்திருந்தோரை கட்டுப்பாடு இழந்த கார் மோதியது!

(தீவகம்)


நயினாதீவுக்குச் செல்வதற்காகக் காத்திருந்த சிங்கள யாத்திரிகர்கள் மீது கார் ஒன்று மோதியதில் மூவர் காயமடைந்தனர். இச்சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம் பெற்றது.

நயினாதீவுக்குச் செல்வதற்காக குறிகாட்டுவானில் காத்திருந்த யாத்திரிகர்கள் மீது, வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று மோதியது. இச்சம்பவத்தில் ஜொசளின் (வயது 65), குஞ்சி நோனா (வயது 60) ஆகிய இரு பெண்கள் உட்பட மூவர் காயமடைந்தனர்.

இதையடுத்து அங்கு கூடியிருந்தவர்களால் கார்ச் சாரதி தாக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. இதையடுத்து இறங்குதுறைப் பகுதிக்குள் வாகனங்கள் செல்வதற்கு கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளதுடன் சுமார் 500 மீற்றர் தொலைவிலேயே வாகனங்களை நிறுத்துமாறும் பணித்துள்ளனர்.

## இன்றைய வரவு - செலவுத் திட்டம்

# சாதாரண மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதாக அமைய வேண்டும்!



## மகிந்த ராஜபக்ஷ அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

சர்வதேச நிதி நிறுவனங்களைத் திருப்திப்படுத்துவதற்கு ஏற்ற முறையில் அல்லாமல் சாதாரண மக்களின் வாழ்க்கையை வளப்படுத்துவதாக 2003ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் அமையவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களின் ஆலோசனைக்கு ஏற்ப வரவு செலவுத் திட்டத்தினை தயாரிக்காமல் சாதாரண மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தி அபிவிருத்தி நோக்கிலான வரவு செலவுத் திட்டமாக அமைய வேண்டும் என அவர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார். அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத்திட்டம் இன்று நிதியமைச்சர் கே.என்.சொக்ஸியால் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# படையினரிடம் இருந்துவந்த மைதானத்தில் 15 வருடங்களின் பின்னர் கிரிக்கெட் போட்டி!

(களுவாஞ்சிக்குடி)

15 வருடங்களுக்கு மேலாக பாவனையின்றி இருந்த பட்டிருப்பு தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் தீபாவளி தினத்தன்று கிரிக்கெட் போட்டியொன்று நடத்தப் பட்டது.

தீபாவளியை முன்னிட்டு 20 கழகங்கள் பங்கு கொண்ட கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. இதில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை பிரதம விருந்தினராகவும், ஜெயந்தன் படையணித் தளபதிகளில் ஒருவரான தயாமோகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டிருந்தனர்.

போட்டி நடைபெற்ற பட்டிருப்பு, தேசிய பாடசாலை விசேட அதிரடிப் படையினரின் கட்டுப்பாட்டில் 15 வருடங்களுக்கு மேலாக இருந்ததும், புரிந்துணர்வு உடன்பாட்டிற்குப் பின்னர் பாடசாலையிடம் கையளிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்றத் தீர்ப்பில் நாம் தலையிடுவதில்லை!

## நீதி அமைச்சர் லொக்கு பண்டார

நீதிமன்றத் தீர்ப்பில் நாம் தலையிடுவதில்லை என நீதியமைச்சர் டபிள்யூ ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மேல் நீதிமன்றம் 200 வருட சிறைத்தண்டனை விதித்தது பற்றி நீதியமைச்சர் எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை என பொதுசன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபாலா டீ சில்வா கூறியதாக வெளியான செய்திக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் லொக்குபண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீதிச்சேவை சுதந்திரமாக இயங்குவதையே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விரும்புகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்தில் 'வணிக ஜோதி' வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வர்த்தக மாணவர் மன்றத்தினரின் "வணிகஜோதி" 20 வது மலர் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் பா.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத் தலைவர் தேவரஞ்சினி சிவாஸ்கரனும், சிறப்பு விருந்தினராக யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை வணிகத்துறை விரிவுரையாளர் க.சிவராசாவும் அறிமுக உரையை உயர் தொழிநுட்ப நிறுவன விரிவுரையாளர் வ.செந்தில்ராஜாவும் நிகழ்த்தவுள்ளனர்.

# பிரதான வீதியைத் தடைசெய்து ஒழுங்கை அமைத்தது கடற்படை!

## வேலணை சேர்.துரைச்சாமி வித்தியாலய அவலநிலை

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலய மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கருதிப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ள ஊர்காவற்றுறை பிரதான வீதியைத் திறந்துவிடுமாறு கோரி, யாழ்.சலன சித்திர அமைப்பினால்-பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு நேற்று மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கல்லூரிச் சுற்றாடலில் முகாமிட்டிருக்கும் கடற்படையினர்-தமது நலன் கருதிப் பிரதான வீதியை மூடிவிட்டு "பாடசாலை ஒழுங்கை" ஒன்றை மாணவர்களின் போக்குவரத்திற்காகக் உருவாக்கிக் கொடுத்துள்ளனர். இப் பாதையில் மழைகாலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால்- அப்பாதையால் போய் வரும் ஆசிரியர்களும், மாணவர்களும் பெருஞ்சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

வேலணை-ஊர்காவற்றுறை பிரதான வீதியூடான போக்குவரத்தை மாணவர்களுக்குத் தடைசெய்வதற்குப் பின்னால் எழக் கூடிய உளவியல் தாக்கத்தை உணர்ந்து கொள்ளும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறோம். சமாதானம் மீதான விரோத உணர்வும், அரச படையினர் மீதான குரோத உணர்வும் மாணவர்களுக்கு எழக்கூடாது என்றால் உடனடியாக கல்வியில் கவனஞ் செலுத்துவதற்குச் சாதகமானவற்றை அமைத்துக் கொடுக்கும்படி அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழரின் வரலாற்றைப் பத்திரப்படுத்த இளைய சமுதாயம் முன்வர வேண்டும்!

**தமிழரின் வரலாற்றுடன் சம்பந்தப்பட்டதான ஆவணங்களை 1956ஆம் ஆண்டு முதல் சேகரித்து அதை நுண்படச் சுருளாக்கும் முயற்சியிலும் வெற்றிபெற்றுள்ள குரும்பசிட்டி கனகரத்தினம், அண்மையில் கண்டியிலிருந்து நமது ஈழநாடு பணிமனைக்கு வந்திருந்தார். அவருடனான நேர்காணல் இது.**

**✷ கேள்வி:- ஆவணக் காப்பகத்தை அமைப்பதற்கான முயற்சியில் நீங்கள் எப்போது இறங்கினீர்கள்?**

*பதில்:-* பத்திரிகைகளைச் சேகரித்து அதை ஆவணப்படுத்தும் முயற்சியை நான் 1956இல் ஆரம்பித்தேன். இதற்காக பத்திரிகைகளை விலைக்கு வாங்கி அதிலுள்ள மாதிரி உருக்களை - அதாவது தமிழர் வரலாறுகளுடன் சம்பந்தப்பட்ட எல்லாத் துறைத் தகவல்களையும் வெட்டி எடுத்து புத்தகமாக்கிச் செய்து கொண்டு இருக்கிறேன். 2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை மாதிரி உருக்களை வெட்டிப் பெரிய தாளில் ஒட்டியே இவற்றைச் செய்துகொண்டு இருக்கும் போது - பல சிக்கல்கள் ஏற்பட்டன. அதனால் இப்போது பத்திரிகைகளை முழுமையாகச் சேகரிக்கிறேன். உதாரணமாக ஒரு முழுப்பக்கச் செய்தியாயின் அதை அப்படியே எடுத்துக் கொள்வோம், இரண்டு செய்தியாயின் அதை வெட்டி பெரியதாளில ஒட்டுவோம்.

இதற்காக மாதாந்தம் 2500 ரூபா வரை செலவாகும். எனினும் தற்போது வீரகேசரி, தினக்குரல், சுடர் ஒளி போன்ற பத்திரிகைகள் - இலவசமாக கிடைக்கின்றன. அவற்றைத் தவிர *Daily News, The Island*, வார இறுதியில் வெளியாகும் பத்திரிகை களையும் வாங்குவேன். அவைகளை முழுமையாகவே சேகரித்துக் கொள்ளுவேன்.

**✷ கேள்வி:- எப்படியான செய்திகளுக்கு கூடுதலான முக்கியத்துவம் கொடுப்பீர்கள்?**

*பதில்:-* பொதுப்படையாகத் தமிழரோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் எல்லாவற்றையும் சேகரிப்பேன். அவற்றுள் கலை, கலாசாரம், மற்றும் பொியார்கள் பற்றியதானவற்றை முக்கியத்துவப்படுத்தி தனித்தனிப் பகுதிகளாகச் செய்கிறோம். சைவசமயம், கல்வி, கைலாசபதி, நாவலர் பற்றியதான 165 தலைப்புக்களில் எண்ணாயிரம் கட்டுரைகளைச் சேகரித்து வெட்டி பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்.

இவற்றைக் கனடா ரொறன்ரோவில் கண்காட்சிக்கு வைத்தேன். அதே போன்று நோர்வே ஒஸ்லோவிலும் கண்காட்சிக்கு வைத்தேன். அங்கு ஆவணங்களை வகைப்படுத்தக்கூடிய வாறு பெட்டிகளை வைத்திருந்தார்கள். அவற்றுள் 150 பெட்டிகளை எடுத்து வந்து உள்ளூர் ஆவணங்களையும் வெட்டி ஒவ்வொரு பகுதிக்கும் என தனித்தனியாக சேகரித்து வருகிறோம். அவற்றுள் முக்கியமான தலைவர்கள், கல்வி, சமயம் சம்பந்தமான கட்டுரைகளையே அதிகமாக சேகரித்துச் செய்து வருகிறோம்.

இலங்கையில் வெளிவந்த 1000 சஞ்சிகைகளைச் சேகரித்து வைத்திருக்கிறேன். இவை 1900 ஆம் ஆண்டு வரையானவையாக இருக்கின்றன.




இவை தவிர 1864 இல் வெளியான தேசாபிமானி பத்திரிகை தொடக்கம் 1999 வரையான நுறாண்டுகளுக்கு அதிகமான வரலாற்றைச் சேகரித்து வைத்திருக்கிறேன். அதில் முக்கால் வாசிப்பங்கு வரலாறுகளை நுண் படச்சுருளாக்கி வைத்திருக்கிறோம்.

60 மிமீ, 35 மிமீ அளவுகளாக அவை சேகரிக்கப்படுகின்றன. அதில் நமது ஈழநாடு பத்திரிகை 60 மி.மீ. இல் அடங்கும். 40 வருடமாக நுண்படச் சுருள் தயாரிக்கும் தொழிலை மேற் கொண்டாலும் 38 வருடமாக எனது சொந்தச் செலவிலேயே இவற்றைச் செய்து வந்தேன்.

ஆனால் கடந்த இரண்டு வருடமாக ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில இவற்றை கண்காட்சியாக வைத்த போது, அவற்றை அங்குள்ள பேராசிரியர்கள் பார்த்துவிட்டு என்னை அழைத்துக் கூட்டமொன்று கூட்டி கௌரவித்தார்கள். பின்னர் - இவை தொடர்பாக அறிந்த நோராட் அமைப்பினர் திட்டமுன்மொழிவுகளை என்னிடம் பெற்று ஆலோசித்து விட்டு பின்னர் தாங்கள் இவற்றைப் பெற்று எனக்கு உதவி வருகின்றனர்.

**✷ கேள்வி:- எப்படி இதில் உங்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது?**

*பதில்:-* காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் நடந்தபோது எம்.பிமாரை காடையர்கள் தாக்கிய செயலானது - மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்த நேரத்தில்தான - தமிழர்களுக்கும் ஒரு வரலாற்றுப் பதிவு வேண்டும் என்ற நோக்கில் இதை ஆரம்பித்தேன். இப்போது இலங்கையில் இதைப்பற்றி யாரும் சிந்திப்பதில்லை. வரலாற்றுப் பதிவு இல்லை என்றில்லை, இருப்பதைச் சேகரிக்க வேண்டும் நூறு வருட வரலாறு - என னிடம் இருந்தபோதும் அதற்கான முழுமையான பத்திரிகைகளும் கிடைக்கவில்லை. கிடைத்தவற்றை மாதம், வருட ரீதியாகப் பிரித்து வைத்திருக்கிறேன்.

நான் இதனைக் குரும்பசிட்டியில் இருக்கும்போதே ஆரம்பித்தேன். இவ்வாறு ஆரம்பித்தும் பல பிரச்சினைகளிற்கு மத்தியில் பல இடங்கள் மாற்றி, கடைசியாகக் கப்பல் மூலமாகக் கண்டிக்கு இவற்றைக் கொண்டு சென்றேன்.

**✷ கேள்வி:- இதைக் கொண்டு இணையத் தளம் ஒன்று ஆரம்பிக்கலாமே?**

*பதில்:-* நான் தனிநபராக இதைச் செய்கிறேன். காலை 5மணி தொடக்கம் இரவு 11மணி வரை இதைச் செய்ய வேண்டும். அதை விட இரண்டு வருடங்களுக்கு முன்னர் கண்டியில் நான் சேகரித்தவற்றைப் பொலிசார் எடுத்துச் சென்று விட்டனர். அதன்போது என்னுடன் நன்கு பழகிய அயற் சமூகத்தினர் கூடப் பேசாது இருந்து விட்டனர்.

பொலிசாரால் எனது வீடு முற்றுகையிடப்பட்டு விசாரிக்கப்பட்டேன். பின்னர் கொழும்பில் இருந்து வந்த அதிகாரியொருவர் இது தொடர்பாக எனக்கெனத் தனியான ஒரு கோவை தயாரித்து தந்தார். பின்னர் இது சம்பந்தமாகப் பிரச்சினைகள் வரவில்லை - எனினும் குறிப்பிட்ட அந்த அதிகாரி தனிப்பட்ட முறையில் என்னுடன் சினேகபூர்வமாக உரையாடும்போது - நீங்கள் செய்யும் இச்சேவை நம் இனத்திற்கு பெரியதொரு சேவை. இதை நீங்கள் தொடர்ந்து செய்யுங்கள் என்று கூறினார். இருந்தாலும் உங்



குரும்பசிட்டி கனகரத்தினம்

களுக்கு மேலும் பிரச்சினைகள் ஏற்பட்டால் இருக்கும் ஆவணங்களையும் இழந்துவிடுவீர்கள் எனவும் கூறினார்.

எனவே இவைகளையும் தாண்டி இந்தச்சேவையை நான் செய்யும் போது அவற்றிற்குச் சமூகம் கைகொடுக்க வேண்டும். ஆனால் சமூகம் அவ்வாறு செய்ய முன்வரவில்லை. இந்நிலையில் சமூகம் இருக்கும்போது இணையத் தளத்தை எவ்வாறு ஆரம்பிக்க முடியும்?

**✷ கேள்வி:- இவை மாணவர்களுக்கு பயன்படத்தக்க வகையில் இருக்கின்றதா?**

*பதில்:-* ஆம். பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகளுக்கு உதவக்கூடிய வகையில் நிறைய ஆவணங்கள் இருக்கிறபடியால், அவர்களின் தொடர்புகளும இருக்கின்றன. ஆனால இவற்றைத் தாம் சேகரிக்க வேண்டும் என்ற ஆர்வம் இல்லை. பாடசாலைக்கு அல்லது பல்கலைக் கழகத்துக்கு ஏதாவது கட்டுரை தேவையென்றால் மட்டுமே வந்து தரவுகளைச் சேகரிப்பார்கள். மாணவர்களுக்கும் இதில் ஆர்வம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கிலேயே இவற்றைக் கண்காட்சிக்கு வைக்கிறேன்.

யாழ்.பொதுநூலகத்திற்கும் கூட இவறறைக் கொடுத்து தனியான முறையில் ஆவணப்படுத்த உதவவுள்ளேன். ஆனாலும் தொடர்ந்தும் இதைச் செய்ய யாரும் முன்வரவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகவே இருக்கிறது. முன்னர் போலன்றி இப்போது இலகுவான முறையில் இவற்றைச் சேகரிக்க முடியும். ஈழகேசரியில் முதன்முதலாக வெளிவந்த கேலிச்சித்திரம் தொடக்கம் 2000 ஆம் ஆண்டுவரை வெளியான கேலிச் சித்திரங்கள் எனது சேகரிப்பில் உள்ளன.

**✷ கேள்வி:- நீங்கள் வைத்திருக்கும் நுண் படச்சுருள்களில் பெறுமதியானது என எதனைக் கருதுகிறீர்கள்?**

*பதில்:-* எல்லாம் பெறுமதியானது தான். இவ்வளவு யுத்தம் நடந்த காலப்பகுதி முதல், இப்போதுள்ள சமாதானச் சூழல் வரையிலாக வெளியான சகல பத்திரிகைகளையும் சேகரித்து வைத்திருக்கிறேன். கூடுதலாக ஆசிரியர் தலையங்கங்களை கட்டாயம் சேகரிப்பேன். ஏனெனில் அது பத்திரிகைகளுக்குப் பத்திரிகை வேறுபட்டதாக அமையும். 'சுதந்திரன்' வெளியான காலப்பகுதியில் எஸ்.டி.சிவநாயகத்தின் 'தினபதி' பத்திரிகையும் வெளிவந்தது. இதில் சுதந்திரனின் கருத்துக்கு எதிராகத்தான் கூடுதலான கருத்துக்கள் இருக்கும். இதை கூடுதலாக சேகரித்ததற்குக் காரணம் மாற்றுக் கருத்துக்களையும் நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதுதான். தென் புலோலியூர் கணபதிப்பிள்ளை மூலமாக புலவர் வரிசைகளைப் பெற்றுள்ளேன். இவற்றைக் கொண்டு நாம் தமிழர்களின் வரலாற்றை அறிந்து கொள்ள முடியும். இந்த வகையில அவையெல்லாம் பெறுமதியானவையே.

**✷ கேள்வி:- நீண்டகாலமாகப் பத்திரிகைத் துறையோடு தொடர்பு வைத்திருக்கிறீர்கள் என்ற வகையில் இப் போதுள்ள பத்திரிகைத்துறையைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

*பதில்:-* இது எனது சக்திக்கு அப்பாற்பட்ட விடயம். இருந்தாலும் பத்திரிகைத்துறையைப் பொறுத்தவரையில் முன்னர் வெளியான பத்திரிகைகளை விடத் தற்போது வெளியாகும் பத்திரிகைகள் நன்றாகவே வளர்ந்துள்ளன. அதாவது மொழி வளர்ச்சிக்கு ஏற்ப பத்திரிகையாளர்களும் தம்மை வளர்த்துக் கொண்டுள்ளார்கள். முன்னைய காலங்களில் வெளியான பத்திரிகைகள் சர்வசாதாரணமாக பேச்சு வழக்கில் நாம் பயன்படுத்தும் சொற் பிரயோகங்களை பத்திரிகைத்துறையிலும் கையாண்டனர். இது தவறில்லை. காலத்தின் வளர்ச்சிக்கேற்ப அவை கையாளப்பட்டன என்று தான் கூற வேண்டும். முன்னர் நாம் செய்திகளை அறிந்துகொள்வதற்கு கொழும்புப் பத்திரிகைகளையே நம்பியிருந்தோம். ஆனால் இப்போது அந்த நிலை மாறிவிட்டது. தற்போது வெளியாகும் பிராந்தியப் பத்திரிகைகளூடாகவே வடக்கு, கிழக்கு மாகாணத்தின் தனித்துவத்தை அறிய முடிகிறது. இந்த வகையில் தற்போது வெளியாகும் பத்திரிகைகள் முன்னேற்றகரமானவை என்றே கூறவேண்டும்.

**நேர்காணல்:**
**கணேஷ்.**

---

# கடற்தொழிலாளரின் வாழ்வை ஒளியூட்ட கலங்கரை விளக்குகள் உயிர்பெறுமா?

**தொ**ண்டமனாற்றிலிருந்து கற்கோவளம் வரையிலான கரையோரப் பகுதிகளில் கலங்கரை விளக்குகள் இல்லாததால் கடற்தொழிலாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் பருத்தித்துறை முனையிலுள்ள கலங்கரைவிளக்கை இயங்க வைப்பதற்கு நட வடிக்கை எடுக்கும்படி கடற்தொழிலாளர் மத்தியில் இருந்து கோரிக்கை விடப்பட்டுள்ளது.

**செய்திக் கட்டுரை**

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டபின் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையில், ஆழ் கடலில் மீன்பிடிக்க அனுமதியளிக்கப் பட்டபின் கூடுதலான கடற்தொழிலாளர்கள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

இரவு நேரத்தில் நீண்டதூரம் சென்று மீன்பிடியில் ஈடுபடும் வள்ளங்கள் கரை திரும்புவதற்கு இந்தக் கலங்கரை விளக்குகள் மிக அவசியமானதாகும்.

தற்போது பெரும் எண்ணிக்கையான கண்ணாடியிழை வள்ளங்கள் ஆழ்கடலில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன. சூறாவளி, கடல் கொந்தளிப்பு நேரங்களில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள வள்ளங்கள் கரை திரும்புவதற்கு இநத கலங்கரை விளக்கு மிகவும் உதவியாக இருக்கும். அண்மையில் சுப்பர்மடத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்கள் திசை மாறிச் சென்று இந்திய மீனவர்களால் காப்பாற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



பருத்தித்துறை முனையிலுள்ள கலங்கரைவிளக்கு செயற்பட்டிருந்தால் மீனவர்களுக்கு இந்நிலை ஏற்பட்டிருக்கமாட்டாது என கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாள் க.சூரியமூர்த்தி, கலங்கரை விளக்கின் முக்கியத்தை எடுத்துக் கூறியும் எதுவிதபலனும் கிடைக்கவில்லை என அவர் கவலை தெரிவிக்கின்றார்.

இன்றைய நிலையில் ஆயிரக் கணக்கான கடற்தொழிலாளர்களின் அத்தியாவசியத் தேவையான கலங்கரை விளக்குகளை மீளவும் இயங்க வைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

*- சு.கணபதிப்பிள்ளை.*

---

## பயிர்களை அழிக்கும் பன்றிகளால் தொல்லை

(அச்சுவேலி)

குட்டியப்புலம் மற்றும் நவக்கிரிப் பகுதிகளில் உள்ள தோட்டங்களுக்கு கூட்டம் கூட்டமாக வரும் பன்றிகள் அங்குள்ள பயிர்களை நாசப்படுத்துவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். பயிர்கள் அறுவடைக்குத் தயாராகும் நாட்களில் இத் தொல்லை அதிகமாக இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

அதிகாரிகள் இதனைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்கும்படி அப் பகுதி விவசாயிகள் கேட்டுள்ளனர்.

(76)

---

# நாவலர் கலாசார மண்டபத்தில் சைவப் பிரசங்க பயிற்சித் திட்டம்

(மானிப்பாய்)

இந்து கலாசார அமைச்சின் ஆதரவுடன் நல்லூரில் அமைந்துள்ள நாவலர் கலாசார மணிமண்டபத்தில் இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் சைவப் பிரசங்க பயிற்சித் திட்ட வகுப்பினை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தப் பயிற்சி வகுப்பில் பங்குபற்றி பயிற்சிகளை முடித்துக்கொள்பவர்களுக்கு இந்து கலாசார அமைச்சினால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தற்போது குடாநாட்டில் வைசசமயநெறி பாரம்பரிய முறைகள் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் எல்லாம் அழிவுற்று வருகின்றன. இவற்றிலிருந்து சைவசமய நெறிமுறைகளைக் காக்கும் நோக்குடன் இந்தப் பயிற்சி நெறிகளை நடத்துவதற்கு இந்து சமய விவகார அமைச்சு முன்வந்துள்ளது.

(100)

---

## சர்வதேச கராட்டிப் போட்டியில்

# பருத்தித்துறை கராட்டிச் சங்கம் 5 பதக்கங்களை வென்றது!

(வடமராட்சி கிழக்கு)

சர்வதேச சோட்டோ கான் சம்மேளன இலங்கைக் கிளை நடாத்திய கராட்டிப் போட்டியில் பருத்தித்துறை "ராஜானி சோட்டோ கான் கராட்டி சங்கம்" ஒரு தங்கப்பதக்கத்தையும், மூன்று வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

மேற்படி வெற்றிக் கிண்ணத்திற்கான வருடாந்த கராட்டிப் போட்டிகள் கொழும்பு வை.எம்.சி.ஏ. கட்டடத்தில் நடைபெற்றது.

கறுப்புப்பட்டி கராட்டிப் போட்டியில் செபஸ்ரியான் யோசேப் 3ம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும், மண்ணிறப்பட்டி கராட்டிப போட்டியில் த.ஜெயசீலன் 2ம் இடத்தையும், வ.சிவகணேஷ் 3ம் இடத்தைப பெற்று முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கங்களையும், ஊதாப்பட்டியில் சோ.காண்டீபன் 1ம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும், அன்ரன் தோமஸ் 3ம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர்.

(17)

# எதிர்பார்த்தளவு ஆதரவு கிட்டவில்லை; பொதுத் தேர்தலுக்கு ஷரோன் உத்தரவு!

## இஸ்ரேலில் அரசியல் நெருக்கடி உச்சத்தில்



(ரெல் அவிவ்)

தனது அரசாங்கத்துக்கான பெரும்பான்மைப் பலத்தை இழந்திருந்த இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தனது ஆட்சியை உறுதிப் படுத்துவதற்கான ஆதரவைப் பெற முடியாத நிலையில்- பொதுத் தேர்தல் ஒன்றுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து- அவரது கட்சிக்குள்ளேயே இருக்கும் அரசியல் எதிரியான முன்னாள் பிரதமர் பென்ஜமின் நெத்தன்யாகு தேர்தல் வரும்வரை ஷரோனின் அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக பொறுப்பேற்க சம்மதித்துள்ளார்.

ஷரோனுடனான அதிகாரப் போட்டியில் தானிருந்தாலும் இஸ்ரேலின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டும் ஈராக்குடனான யுத்த அபாயம் நிலவுவதாலும்- ஷரோனுடன் ஒத்துழைப்பதாக அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை- இஸ்ரேலிய ஜனாதிபதி மோஷே ஹற்சவ் - பாராளுமன்றத்தினைக் கலைக்குமாறும், பெப்ரவரி 4 ஆம் திகதியளவில் பொதுத்தேர்தலை நடாத்துமாறும் ஷரோன் தன்னைக் கேட்டிருப்பதாக தகவல் வெளியிட்டுள்ளார்.

ஷரோனின் அமைச்சரவையில் அங்கம் வகித்த கூட்டணிக் கட்சியான தொழிற்கட்சி தனது ஆதரவை விலக்கிக் கொண்டதாலும், ஷரோனின் மீது மூன்று நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டுள்ளதாலும் அவர் மிகப் பெரும் அரசியல் நெருக்கடிக்குள் சிக்கியிருப்பது குறிப்பிடத்தக் கது.

## அமெரிக்க நிறுவனங்களுக்கு எச்சரிக்கை

இஸ்ரேலியப் பொருட்களை பகிஷ்கரிக்கும் அரபுலீக் நாடுகளின் நடவடிக்கைகளுக்கு, ஒத்துழைப்பு வழங்கும் அமெரிக்க கம்பனிகளுக்கு, புஷ் நிர்வாகம் எச்சரித்துள்ளது.

இஸ்ரேலியப் பொருட்களை பகிஷ்கரிக்கும் அரபுலீக் நாடுகளுக்கு அமெரிக்க வர்த்தகத்துறை அமைச்சர் கெனத் ஜஸ்டர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். மேலும், அமெரிக்க வர்த்தகத்துறை அரபு லீக்கின் பகிஷ்கரிப்பை முடிவுக்கு கொண்டு வருவதில் மிக உன்னிப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அத்துடன் பகிஷ்கரிப்பிற்கான எதிர்நடவடிக்கைகளில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

## யேமன் நாட்டில் அமெரிக்கா இரகசிய நடவடிக்கை

# அல்கெய்டா தீவிரவாதிகளின் கார் மீது சி.ஐ.ஏ. விமானத் தாக்குதல் நடத்தியது!

(யேமன்)


அல்கெய்டா உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் ஆறுபேர் அமெரிக்க சி.ஐ.ஏயின் ஏவுகணைத்தாக்குதல் ஒன்றின் மூலம யேமனில் வைத்துக் கொல்லப்பட்டனர்.

பெயர் குறிப்பிட விரும்பாத செய்தி நிறுவனம் ஒன்றின் தகவலின்படி - திங்கட்கிழமை சி.ஐ.ஏயின் விமானத்திலிருந்து, அல்கெய்டா தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப் படும் நபர்கள் பயணம் செய்த கார் மீது, ஏவுகணைத்தாக்குதல் நடாத்தப்பட்டதாக இச்சம்பவம் பற்றி தெரியவருகின்றது.

அமெரிக்கா ஆப்கானிஸ்தானிற்கு வெளியே அல்கெய்டா இயக்கத்தின் மீது தாக்குதல் நடத்தியது இதுவே முதல் தடவையாகும்.

இத்தாக்குதல் பற்றி அமெரிக்கா உத்தியோக பூர்வமாக எவ்வித தகவல்களையும் வெளியிடாத போதும், இடைத் தேர்தலுக்கான பிரச்சாரங்களின் போது அல்கெய்டா இயக்கத்தினரை அழித்தொழிக்கும் நடவடிக்கையைத் தாம் தொடர்ந்து கொண்டிருப்பதாக, அமெரிக்க ஜனாதிபதி புஷ் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அல்கெய்டா இயக்கத்தினரை ஒடுக்கும் அமெரிக்கப் பணிக்கு யேமன் அரசு தனது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றமையும் கவனிக்கத்தக்கதாகும்.



தாக்குதலில் சேதமடைந்த கார்.

# காஷ்மீரில் முஸ்லிம் போராளிகளின் தாக்குதலில் 4 பொதுமக்கள் பலி!


(சிறிநகர்)

இந்தியாவின் நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீரில் பூன்ஞ் கிராமத்தில் முஸ்லிம் போராளிகள் பஸ் மீது மேற்கொண்ட தாக்குதலினால் நான்கு பொதுமக்கள் கொல்லப் பட்டதோடு ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்திய இராணுவத்தினர் வடநகரான சோரிபூரில் முஸ்லிம் போராளிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட ஒரு சில மணி நேரத்தின் பின்னர் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியத் தலைநகர் நியூடெல்கியில் இரு சந்தேக நபர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதன் பின்னர் இந்திய புலனாய்வுத் துறையினர் தீபாவளித்தினத்தன்று தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என எச்சரித்தனர் என்றும் தெரியவருகின்றது.

இதேவேளை காஷ்மீரில் குளிர் காலத் தலைநகரான ஜம்முவிற்கு அரச நிர்வாகம் மாற்றப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆறுமாத காலத்திற்கு அரசசெயலகம் ஜம்முவிலேயே இயங்கவுள்ளது. காஷ்மீர் முதலமைச்சர் முப்தி முஹமட் சயீத் செயலகம் ஜம்முவிற்கு மாற்றப்பட்டதை வரவேற்றுள்ளார்.



காஷ்மீரில் தீவிரமாகும் பாதுகாப்பு

## சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற றோஸ் கார்டன் ஹோட்டல் பகுதியின் வரைபடம்.






ஹோட்டலின் முகப்புத் தோற்றம்

**The Rose Garden**

**APRIME RESORT**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

**COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD**

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

CES

விண்ணப்ப முடிவுத் திகதி: 15.12.2002

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223, Kasthuriyar Road,
Jaffna.
(Opposide of J/Hindu Primary School)

# நிவாரண விநியோகத்திற்கு கிளிநொச்சியிலிருந்து அரிசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உலர் உணவு நிவாரண விநியோகத்துக்காக கிளிநொச்சியிலிருந்து அரிசி எடுத்து வரப்படவுள்ளது.

இனிவருங்காலத்தில் குடாநாட்டில் நிவாரணமாக விநியோகம் செய்வதற்குத் தேவையான அரிசியை கிளிநொச்சி மாவட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உலர் உணவு விநியோகத்தின் போது தரமான அரிசியை வழங்குவதற்காகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலம் வரை தென் பகுதியில் இருந்து எடுத்து வரப்படும் அரிசியே நிவாரண விநியோகத்தின் போது வழங்கப்பட்டு வந்தது. இதன் தரம் குறித்து பெரும் சர்ச்சைகள் உருவாகியிருந்தன.

இவற்றைவிட தென்பகுதியில் இருந்து எடுத்துவரப்படும் அரிசியின் விலையிலும் விட கிளிநொச்சி இருந்து எடுத்து வரப்படுவதால் குறைந்த பெறுமதி நிர்ணயம் செய்து விநியோகம் செய்ய முடியும். இதனால் பொதுமக்கள் அதிகம் பயன்பெறுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

## நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து மட்டக்களப்பில் இன்று பேரணி!

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு மேல் நீதிமன்றம் 200 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தமைக்குக் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவிக்கும் வகையில் இன்று மட்டக்களப்பில் மாபெரும் பேரணி நடத்தப்படவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இப்பேரணியை மட்டக்களப்பு பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

## காவல்துறை பணிமனை பளுகாமத்தில் திறப்பு!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பளுகாமத்தில் நேற்று தமிழீழக் காவல் துறையின் காவல் பணிமனை திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஷ் நாடாவை வெட்டி காவல் பணிமனையைத் திறந்து வைத்தார்.

காவல் பணிமனையின் மக்கள் தொடர்பகத்தை மட்டு- அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் திறந்து வைத்தார். பெயர்ப்பலகையை மட்டு - மேலதிக அரச அதிபர் வே.சண்முகம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இவ்வைபவத்தில் மட்டு- அம்பாறை புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ரமணன், மட்டு- அம்பாறை மகளிர் அரசியல் பொறுப்பாளர் பானுகா மற்றும் பிரமுகர்களும், மதத் தலைவர்களும், முஸ்லிம் பிரநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர்- சம்பூரில் காவல்துறைப் பணிமனை நாளை திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

திருகோணமலை மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளில் காவல்துறையில் ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக விரைவில் விண்ணப்பங்கள் கோரப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஒஸ்லோ....

சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த ஜோய் மகேஸ்வரன் ஆகியோரும்-

அரசாங்கத் தரப்பில் சமாதனச் செயலகத்தின் செயலாளர் பேனாட் குணதிலக, எம்.டி.டி. பீரிஸ், திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் ர.்.வீக் ஆகியோருடன், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லீம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரும் இடம்பெறவுள்ளனர்.

வரும் 25ஆம் திகதி ஒஸ்லோவல் ஆரம்பமாகவுள்ள உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்திற்கு முன்னராக சில முக்கிய முடிவுகள் இச்சந்திப்பில் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக - வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாடுகளிலிருந்தான உதவிகளைப் பெறத்தக்க வகையில் நிதியம் ஒன்றை அமைப்பதில் இச்சந்திப்பில் முக்கிய கவனம் செலுத்தப்படலாம் என அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இதேவேளை - உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது தொடர்பாகவும், அப்பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது பற்றியும் ஆராயும் - இருதரப்பினதும் படைத்தளபதிகளின் சந்திப்பு வரும் 10ஆம் திகதி ஓமந்தையில் நடைபெறவிருப்பது தெரிந்ததே.

### தலைவர்....

போக்குவரத்து, வங்கி மற்றும் பொது நிறுவனங்களுக்கும் இப் பேரணிக்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி எதிர் வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக் கழக முன்றிலில் இருந்து ஆரம்பமாகி, பலாலி வீதி வழியாக, யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கு சென்று, அவ்வழியே யாழ்ப்பாண அரசாங்க அதிபர் செயலகத்தை சென்றடைந்து, அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட இருக்கிறது.

இந்தப் பேரணிக்கான ஒழுங்கினை கிராமிய, கோட்ட ரீதியாக பொது அமைப்புக்களின் ஒன்றியங்களை மேற்கொள்ளுமாறு, யாழ்ப்பாண மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் கேட்டுக் கொள்வதுடன், மேற்படி பேரணியில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு தமது உணர்வுபூர்வமான எதிர்ப்புக்களை சிங்கள தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துக்காட்ட கிராமிய, மாவட்ட ரீதியாக தம்மைத் தயார்படுத்தி வருவதாக ஒன்றியங்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மீண்டும்....

பளுகாமத்தில் நேற்று காவல் துறை பணிமனையைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட துரதிஷ்டமான நிலை இனி ஏற்படக்கூடாது. இதில் எமது தலைவர் அவதானமாகவும் உறுதியாகவும் இருக்கின்றார் எனவும் கூறினார்.

### கட்டம் கட்டமாக....

றோம். அவர்கள் மோதல்களை முடிவுக்கு கொண்டு வருவதான தமது சர்வதேச அனுபவத்தைப் பகிர்கின்றனர். அவர்களுக்கு இப்பிராந்திய அரசியலிலோ, பாதுகாப்பு விடயங்களிலோ ஆக்கிரமிக்கும் ஆர்வம் இல்லை. அவர்களது ஒரே நோக்கம் இரு தரப்பையும் பேச்சு மேசைக்கு கொண்டு வருவதேயாகும். அவர்கள் இந்தப்பணியை இப்போதும் சிறப்பாகவே செய்கின்றனர்.

மற்றைய விடயம், முன்னொரு போதுமில்லாதவாறு போர்நிறுத்தத்தை கண்காணிக்கச் சர்வதேசக் குழு ஒன்று உள்ளது. முன்பும் போர் நிறுத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், அவை விரைவில் முறிவடைந்துவிட்டன. இப்போது சிறு பிரச்சினை ஏற்பட்டாலும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அவற்றை அகற்றிவிடுகின்றனர்.

ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட போன்ற திறமை மிக்க குழுவொன்றை பிரதமர் ரணில் இயக்குகின்றார். இவர்கள் சமாதான நடவடிக்கையில் தீவிர ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர். இருதரப்பும் சமாதானத்தில் தீவிரமாக இருக்கும் போது சமரசமுயற்சி தடையின்றித் தொடரும் என்றார்.

அடிப்படைப் பிரச்சினைகளை பற்றியே இப்போது பேச வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், லக்ஷ்மன் கதிர்காமரும் கூறி வருகின்றனரே எனக் கேட்கப்பட்ட போது, பதிலளித்த அன்ரன் பாலசிங்கம், 'ஏழு வருடங்களுக்கு முன் இதைத்தான் இவர்கள் கூறினர். இதுவே சமரச முயற்சியை முறித்தது.

ஜனாதிபதிக்கும் லக்ஷ்மனுக்கும் அடிப்படை பிரச்சினை என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை என்பதை நாம் விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அவர்களைப் பொறுத்தவரைக்கும், ஏதோ ஓர் அதிகாரப்பகிர்வு வடக்கு-கிழக்கிற்கு வழங்குவது அல்லது வடக்குக்குத் தனியான அலகு, கிழக்குக்குத் தனியான அலகு எனப் பிரிப்பதேயாகும். பிரச்சினைக்கான தீர்வாக அவர்கள் எதைக் கருதி வைத்திருக்கின்றனர் என்று எனக்குத் தெரியாது. அவர்கள் நினைப்பதெல்லாம் தமிழ்மக்களுக்கு ஏதோ ஓர் தீர்வைக் கொடுத்துவிட்டால் புலிகளிடமிருந்து மக்களைப் பிரித்து விடலாம் என்று கருதுகின்றனர். இதன் மூலம் பிரச்சினை தீர்ந்துவிடும் என்பது அவர்கள் நிலை. இதனாலேயே அவர்கள் 'அடிப்படை பிரச்சினைக்குத் தீர்வு' என்ற பதத்தை உபயோகித்து வருகின்றனர். நாம் கேட்பது என்னவென்றால் அடிப்படைப் பிரச்சினை என்று அவர்கள் கூறுவது எதை? தற்போதைய நிலையில் இலங்கையின் அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டு வந்து புதியதொரு அரசியலமைப்பின் கீழ் தமிழர்களின் பிரச்சினைக்கு திருப்திகரமான தீர்வுகாண முயற்சிக்க வேண்டும். பிராந்திய சுயாட்சி போன்ற தீர்வுகளை தமிழ் மக்களுக்கு கிடைக்க நாம் முயற்சிப்போம். சந்திரிகாவுக்கும் கதிர்காமருக்கும் இதில் விருப்பமில்லை. அவர்களது முக்கிய நோக்கம் ரணிலுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதேயாகும். தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைக்கு தீர்வு என்ற சரியான நிலைப்பாட்டையே ரணில் எடுத்திருக்கின்றார். இது தான் தமிழ் மக்களுக்கு இப்போது அவசியமும் கூட. அவர்கள் தம் இடங்களில் மீளக்குடியேற வேண்டும். போரினால் சிதைவடைந்த பொதுசன உட்கட்மைப்பு புனரமைப்பு செய்யப்பட வேண்டும். வீடுகளைக் கட்டப் பணம் பெறவேண்டும். இதுதான் தமிழ் மக்களின் உடனடிப்பிரச்சினையாகும். ரணில் இதைத்தான் செய்கிறார். நாம் ஆதரவு அளிக்கிறோம். கட்டம் கட்டமாகவே நாம் தமிழரின் பிரச்சினை பற்றி கலந்துரையாடுகின்றோம். நாம் ஒரு நிலையை அடைந்ததும் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவோம்.

19ஆவது அரசியல் சீர்திருத்தம் தோல்வி கண்டது மிகவும் ஒரு பின்னடைவான விடயம். இது டிசம்பர் 5 இற்கு பின் ரணில் அரசுக்கு பலவீனத்தைத் தரக்கூடியது. பொருளாதாரத்தை கட்டி எழுப்பவும் இனப் பிரச்சினைக்கு தீர்வைக்காணவும் உறுதியான அரசு தேவை. ஆனால் துரதிஷ்டவசமாக ஜனாதிபதி இவ் விடயங்களில் அக்கறையற்றவராகவே இருக்கிறார். அவரின் ஒரே இலக்கு ரணிலின் திட்டங்களை முறியடிப்பதேயாகும். ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்க அவர்களுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை. இல்லாவிடின் சமாதான முயற்சியை முன்னெடுக்கும் அவரின் நடவடிக்கைகள் கடினமான நிலையை அடையும். இதற்கு தேர்தலே ஒரு வழியாக அவருக்கு இருக்கும். இதுவே பெரும்பான்மையைப் பெறவும் உதவும் என்றார்.

உங்கள் அன்புச் செல்வங்களின்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நமது ஈழநாட்டில்!

முற்றிலும் இலவசமாக!!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின்
பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "நமது ஈழநாடும்" இணைகின்றது!
உங்களது சிறாரின் புகைப்படத்துடன்
கீழ்வரும் கூப்பன்களில் மூன்றினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்!
உங்கள் செல்வத்தின் பிறந்த நாளன்று நமது ஈழநாடும்,
புகைப்படத்துடன் பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும்.



வாழ்க வளமுடன்!

சிறாரின் பெயர் :..............................
முகவரி :..............................
பிறந்த ஆண்டு :..............................

கூப்பன்கள் மூன்றும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.



..............................
பெற்றார் ஒப்பம்

## நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1அமெரிக்க டொலர் | 96.11 | 96.61 |
| 1ஸ்ரேலிங் பவுண் | 149.30 | 150.37 |
| 1யூரோ | 95.62 | 96.60 |
| 1சுவிஸ் பிராங் | 65.21 | 66.23 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 53.56 | 54.43 |
| 1ஜப்பானிய யென் | 00.78 | 00.79 |
| 1சவூதி றியால் | 25.71 | 25.71 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.11.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.